5

# இன்றைய நாட்களில் கீழ்ப்படிதல்: பழைய ஏற்பாடா அல்லது புதிய ஏற்பாடா?

*தேவனைப் புதிய ஏற்பாட்டின்படி ஆராதித்தல் என்பது பழைய ஏற்பாட்டில் இருந்து தெளிவான வகையிலான முறிதலாக உள்ளது. நாம் மோசேயைக் கண்ணோக்கினால், அவர் நமக்கு, கிறிஸ்தவ விசுவாசத்தைத் தோற்றுவிப்பவரான (எபிரேயர் 2:10; 12:2) இயேசுவைச் சுட்டிக் காண்பிக்கிறார் (உபாகமம் 18:18; யோவான் 5:46; நடபடிகள் 3:22, 23). இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை உணர்ந்து அறிதலானது, ஆராதித்தல் எவ்வாறு என்று அறிவதற்குக் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டைக் கண்ணோக்கக் கூடாது என்பது ஏன் என்பதைப் புரிந்து கொள்ளுதலைச் சுலபமாக்குகிறது. நியாயப்பிரமாணத்தின் ஒருபகுதி கட்டுவிக்கும் என்றால், அதன் எல்லாப் பகுதிகளும் கட்டுவிப்பவையாக இருக்கும் (கலாத்தியர் 3:24, 25; 5:3). எபிரெயருக்கு எழுதிய நிருபம், புதிய உடன்படிக்கையின் மேன்மைத்தன்மையைக் காண்பிக்கிறது (காண்க 7:19, 22).*

**மன்னிப்பும் பலிகளும்**

*நியாயப்பிரமாணம் (லேவியராகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி) பலவகையான பலிகளைச் செலுத்தும்படி கேட்கிறது, ஆனால் அப்படிப்பட்ட பலிகள் பாவத்தை எடுத்துப் போடக்கூடாதிருந்தன (எபிரேயர் 10:4). இயேசுவின் மரணத்தின் மூலமாகவே உண்மையான மன்னிப்பு வருகிறது (1 பேதுரு 2:24). சுவிசேஷத்தை ஒருவர் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவின்மீது கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38; ரோமர் 10:10), தொடர்ந்து ஒளியிலே நடந்து (1 யோவான் 1:7-9), இவ்வாறாக இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் மூலமாகவே இரட்சிப்பு அடையப்படுகிறது (எபிரேயர் 5:9). உதடுகளின் கனியும் நற்செயல்களுமே கிறிஸ்தவர்களின் பலிகளாக இருக்க வேண்டியுள்ளன (எபிரேயர் 13:15, 16).*

**விழாக்கள், பண்டிகைகள் மற்றும் ஓய்வுநாட்கள்**

*இஸ்ரவேல் மக்கள் பண்டிகை நாட்களை ஆசரிக்க வேண்டும் என்றும் நியாயப்பிரமாணம் கேட்டுக்கொண்டது (எண்ணாகமம் 28:16-25; உபாகமம் 16:16; 2 நாளாகமம் 8:13). கர்த்தருடைய நாள்தான் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த நாளாக உள்ளது (காண்க - வெளிப்படுத்தின விசேஷம் 1:10). புதிய ஏற்பாட்டின்கீழ் நாம், இயேசுவைக் கனப்படுத்தும் விதத்தில் ஆராதனைக்கு*

*இந்த விசேஷித்த நாளைக் கொண்டுள்ளோம். ‘‘கர்த்தருடைய நாள்’’ என்ற சொற்றொடர் தொடக்க கால சபையில், வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக் கிழமையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2), அந்த நாளில் தான் அது கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதன்மூலம் இயேசுவை நினைவுகூரக் கூடிற்று.*

**ஆராதிக்கும் இடம்**

*இஸ்ரவேல் மக்கள் ஆராதிக்க எருசலேம் செல்ல வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். கிறிஸ்தவ ஆராதனையானது ஒரு குறிப்பிட்ட இடத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதில்லை. ஆராதனை இனியும் ஒரு இடத்துடன் மட்டுப்படுத்தப்பட்டிராதபடிக்கு மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று இயேசு போதித்தார் (யோவான் 4:21-24).*

**கொடுத்தல்**

*நியாயப்பிரமாணத்தின்கீழ், தசமபாகம் என்பது விருப்பத் தேர்வாக இருக்கவில்லை, ஆனால் அது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை செலுத்தப்பட வேண்டிய வரியாக இருந்தது (உபாகமம் 14:28, 29; 26:12). கிறிஸ்தவர்கள் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று எவ்விடத்திலும் கட்டளையிடப்பட வில்லை. சபையின் உறுப்பினர்கள் வாரத்தின் முதல்நாளில், தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஏற்ற வகையிலும் தங்கள் இருதயத்தில் நியமித்தபடியும் கொடுக்க வேண்டும் (1 கொரிந்தியர் 16:2; 2 கொரிந்தியர் 9:7).*

**ஆசாரியத்துவம்**

*இஸ்ரவேல் மக்கள், லேவி கோத்திரத்து ஆரோனின் பின் சந்ததியார்களான, ஆசாரியர்கள் மூலமாகவே தேவனை அணுக வேண்டியிருந்தனர் (யாத்திராகமம் 28:41; 29:9). இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், நமது ஒரே மத்தியஸ்தரான இயேசுவின் மூலமாக (1 தீமோத்தேயு 2:5) தேவனை அணுகுகின்றனர். இப்போது ஆண்கள் பெண்களாகிய எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாக உள்ளனர் (1 பேதுரு 2:5, 9; வெளிப்படுத்தின விசேஷம் 1:6; 5:10).*

*புதிய உடன்படிக்கையின்கீழ், கிறிஸ்தவர்கள் “தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், தேவனுக்குச் சொந்தமான ஜனமாயும்” இருக்கின்றனர் (1 பேதுரு 2:9).*